# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.2, தியாகராயர் சாலை,(ஆலையம்மன் கோவில் அருகில்),எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை-600 018. தொலைபேசி எண்.243447590

**ஆணை நாள் 12.11.2020**

**முன்னிலை**

**திரு ரா. ராஜகோபால், இ.ஆ.ப., (ஓ)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA-2683/SCIC/2020**

திரு M.தனபாலன் -- மேல்முறையீட்டாளர்

/எதிர்

பொதுத் தகவல் அலுவலர் / துணை இயக்குநர்,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்-1, -- பொது அதிகார அமைப்பு
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார
இயக்ககம், மதுரை.

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் 21.10.2019 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலருக்கு அனுப்பிய மனுவில், மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், குலமங்களம் ஊராட்சிக்குட்பட்ட தொழிற்சாலைகள் தொடர்பாக 7 இனங்களில் தகவல்கள் கோரியுள்ளார். பொதுத் தகவல் அலுவலர் 15.11.2019 தேதியிட்டு பதிலளித்துள்ளார். அதன்பின்னர், பிரிவு 19(1)-ன்கீழ் 29.11.2019-ல் முதல் மேல்முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார். அதன்பின்னர் மனுதாரர், பிரிவு 19(3)-ன்கீழ் 02.03.2020-ல் தமிழ்நாடு தகவல் ஆணையத்திற்கு இரண்டாம் மேல் முறையீட்டு மனுவை அனுப்பியுள்ளார்.

2. மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது இவ்வாணையத்தால், 09.09.2020 அன்று பிறப்பிக்கப்பட்ட ஆணையில், மனுதாரர் கோரும் தகவல்களை முழுமையாக வழங்குவதற்கு கடைசி வாய்ப்பு வழங்கும் வண்ணம் 25.09.2020-க்குள் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டிருந்தது. மனுதாரருக்கு எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை என்றாலோ, முழுமையற்ற தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது தவறான, குறைபாடான தகவல்கள் வழங்கப்பட்டிருந்தாலோ, மனுதாரர் 30.09.2020-க்குள் ஆணையத்திற்கு கடிதம் மூலம் தெரிவிக்குமாறு அறிவுறுத்தப்பட்டிருந்தது.

3. மேலே குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் ஆணையின்பால் மனுதாரரின் கவனம் ஈர்க்கப்படுகிறது. அந்த ஆணையில் மேற்கூறப்பட்ட வழக்கில் பொதுத் தகவல் அலுவலர் தகவல்களை வழங்க பணிக்கப்பட்டிருந்தார். அத்தகவல்களை ந.க.எண்.ஈ/1374/2019, நாள் 25.09.2020 என்ற கடிதத்தின் வாயிலாக வழங்கியதாக பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்துள்ளார். (இணைப்பு). அதன்பின்னர், பல நாட்களாகியும் வரப்பெற்ற தகவல்கள் சம்மந்தமாக மனுதாரரிடமிருந்து எந்தவொரு ஆட்சேபணையும் தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் 11.11.2020 வரை பெறப்படாத காரணத்தால், மனுதாரரின் வழக்கு முற்றாக்கி ஆணையிடப்படுகிறது.

**ஒம்/- (ரா. ராஜகோபால்)**
**மாநில தலைமைத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA-2683/SCIC/2020</u>**

<u>பெறுநர்</u>
<u>பொது அதிகார அமைப்பு</u>
பொதுத் தகவல் அலுவலர் / துணை இயக்குநர்,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்-1,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்,
மதுரை.

<u>மனுதாரர்</u>
திரு M.தனபாலன்,
த/பெ. மருதுபாண்டியன்,
2/121, வடக்குத்தெரு,
குலமங்களம், மதுரை-625 017.
PR/PS 16.11.2020

# தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

SA2683/2020

| | |
|---|---|
| அனுப்புநர்<br>திரு.ஆர்.கிஷோர்ஜி, எம்.இ.,<br>துணை இயக்குநர்<br>தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்-I<br>மதுரை. | பெறுநர்<br>மாநில தலைமைத் தகவல் ஆணையர்<br>தமிழ்நாடு தகவல் ஆணையம்,<br>சென்னை. |

TAMILNADU INFORMATION COMMISSION
29 SEP 2020
031449
CHENNAI 600 018

ந.க.எண்.அ/1374 / 2019, நாள்: 25 09.2020

ஐயா,

பொருள்: தகவல் அறியும் உரிமைச்சட்டம் 2005-ன் கீழ் சில தகவல்கள் வழங்கப்பட்டது - மேல்முறையீடு செய்யப்பட்டது – ஆணைக்கு பதில் சமர்ப்பித்தல் - தொடர்பாக

பார்வை:
1. திரு.M.தனபாலன், என்பவரின் மனு நாள்.21.10.2019 (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.31.10.2019)
2. இவ்வலுவலக இதே எண்ணிட்ட பதில் கடிதம் நாள்.15.11.2019
3. மாநில தலைமை தகவல் ஆணையர், தமிழ்நாடு தகவல் ஆணையம் அவர்களின் ஆணை எண்.SA2683/மா.த.த.ஆ/2020 நாள்.09.09.2020 (இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.24.09.2020)

-----

பார்வை (3)ல் காணும் தங்களது ஆணைக்கு கீழ்வருமாறு பதில் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

பார்வை (1)ல் காணும் மனுவில், மனுதாரர் கோரிய தகவல்கள் இவ்வலுவலக ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரருக்கு தகவல்கள் பார்வை (2)ல் காணும் கடிதம் பதிவஞ்சல் ஒப்புதல் அட்டையுடன் மனுதாரருக்கு தகவல் அனுப்பப்பட்டது.

எந்த தகவல் திருப்திகரமாக இல்லை என்பதை குறிப்பிட்டு இந்த மனு தொடர்பாக எங்கள் துறையின் மேல்முறையீட்டு அலுவலரான இணை இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், மதுரை அவர்களுக்கு மனுதாரரால் மேல்முறையீடு மனு ஏதும் இது நாள் வரை விண்ணப்பிக்கப்படவில்லை என்பதனை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தற்போது பார்வை (3)ல் காணும் தங்களின் ஆணை இவ்வலுவலகத்தில் 24.09.2020 அன்று பெறப்பட்டது என்பதனை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். மனுதாரருக்கு தகவல்கள், தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன்படி இவ்வலுவலக ஆவணங்களின் அடிப்படையில் எவ்வித மறைவும் இன்றி மறுத்தலுமின்றி அனுப்பப்பட்டுள்ளது. ஆனால் மனுதாரர் பதில் திருப்திகரமாக இல்லாததால் மேல் முறையீடு செய்ததனைத் தொடர்ந்து மனுதாரர் கோரிய விவரங்களான,

இனம் 1- மனுதாரர் கோரிய தகவல் வழங்கப்பட்டது.
இனம் 2- மனுதாரர் கோரிய தகவல் வழங்கப்பட்டது.
இனம் 3- அத்தொழிற்சாலைகளில் வருகை பதிவேடுகள் முறையாக பராமரிப்பு செய்திருந்தால் அதன் நகல் தருக,
இனம் 4- அத்தொழிற்சாலைகளில் பணிபுரிவோர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் மாதத்திற்காகவா, வாரத்திற்காகவா அல்லது தினந்தோறுமா? அப்படி சம்பளம் வழங்கப்பட்டிருந்தால் ஆண் பெண் சம ஊதியமா? வேறுபாடு உள்ளதா? வேறுபாடு இருந்தால் விவரம் தருக.
இனம் 6- அத்தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கு கேண்டீன் வசதி உள்ளதா? விவரம் தருக. சலுகை விலையில் உணவு தரப்படுகிறதா?

மேற்கூறிய 3,4 மற்றும் 6 ஆகிய இனங்களில் கோரப்பட்ட இவ்வலுவலகத்தில் இல்லாத தகவல்கள் தற்போது தங்களின் ஆணையின் படி தொழிற்சாலை நிர்வாகத்தினரிடம் கோரப்பட்டுள்ளது. தகவல்கள் பெறப்பட்டவுடன் உடனடியாக மனுதாரருக்கு அனுப்பப்படும் என்பதனை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், மனுதாரர் கோரிய விவரங்களான,

இனம் 5- அத்தொழிற்சாலையில் பணிபுரிவோர்களுக்கு P.F., E.S.I. பிடித்தம் முறையாக பிடிக்கப்பட்டிருந்தால் அதன் விபரம், அப்படி பிடித்தம் செய்யப்படவில்லை என்றால் அதன் காரணம் தருக. மற்றும்

இனம் 7- அத்தொழிற்சாலையிலிருந்து தொழிலாளர்களுக்காக தொழில் வரி ஊராட்சிக்கு கட்டப்பட்டிருந்தால் அதன் நகல் தருக

மேற்கூறிய 5 மற்றும் 7 ஆகிய இனங்களில் கோரப்பட்ட இவ்வலுவலகத்திற்கு சாராத தகவல்கள் தற்போது தங்களின் ஆணையின் படி, விவரங்களை மனுதாரருக்கு தகவல் தெரிவிக்குமாறு சம்பந்தப்பட்ட துறை அலுவலகத்தினருக்கு மேற்கண்ட மனுவின் நகல் அனுப்பப்பட்டுள்ளது.

எனவே,தங்களின் ஆணைக்கிணங்க தற்பொழுது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை தெரிவித்து, மேற்கூறிய மேல்முறையீடு மனு மீது மேல் நடவடிக்கை ஏதும் தொடராமல் பரிசீலிக்குமாறு தங்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

25/9/2020

துணை இயக்குநர்
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்-I
மதுரை.

நகல் பணிந்தனுப்பப்படுகிறது.
இணை இயக்குநர் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், மதுரை.

SA 2683/20

பதிவஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

அனுப்புநர்
திரு.ஆர்.கிஷோர்ஜி, எம்.இ.,
பொது தகவல் அலுவலர் /
துணை இயக்குநர்,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்-I,
மதுரை

பெறுநர்
திரு.M.தனபாலன்,
CPI(M) ஒன்றியக்குழு உறுப்பினர்,
த/பெ.மருதுபாண்டியன்,
2/121, வடக்குத்தெரு,
குலமங்கலம், மதுரை-625 017

TAMILNADU INFORMATION COMMISSION
29 SEP 2020
031444

ந.க.எண்.ஈ/1374/2019, நாள்: 25.09.2020

ஐயா,

பொருள்: தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் சில தகவல்கள் கோரியது – தொடர்பாக.

பார்வை: 1.திரு.M.தனபாலன், என்பவரின் மனு நாள்.21.10.2019
(இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.31.10.2019)
2.இவ்வலுவலக இதே எண்ணிட்ட பதில் கடிதம் நாள்.15.11.2019
3.மாநில தலைமை தகவல்ஆணையர், தமிழ்நாடு தகவல் ஆணையம் அவர்களின் ஆணை எண்.SA2683/மா.த.த.ஆ/2020 நாள்.09.09.2020
(இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.24.09.2020)

-----

மேற்பொருள் தொடர்பாக பார்வை 3ல் காணும் ஆணையின்படி தங்களது மனுவில் கோரிய இனங்களுக்கு கீழ்கண்டவாறு கூடுதல் தகவல் அளிக்கப்படுகிறது.

இனம் 1 தகவல் வழங்கப்பட்டது

இனம் 2 தகவல் வழங்கப்பட்டது

இனம் 3 மேற்கூறிய தொழிற்சாலைகளின் வருகை பதிவேடுகளின் நகல்கள் இவ்வலுவலகத்தில் இல்லை.

இனம் 4 மேற்கூறிய தொழிற்சாலைகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்கப்படும் முறை குறித்த தகவல்கள் ஏதும் இவ்வலுவலகத்தில் இல்லை.

இனம் 6 மேற்கூறிய தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்கு கேண்டீன் வசதி உள்ளதா சலுகை விலையில் உணவு தரப்படுகிறதா என்ற விவரம் இவ்வலுவலகத்தில் இல்லை.

மேலும், மேற்கூறிய தங்களால் கோரப்பட்ட இனம் 3, இனம் 4 மற்றும் இனம் 6-ன் தொடர்பாக தகவல்கள் குறித்து இவ்வலுவலகத்தில் ஆவணங்கள் ஏதும் பராமரிக்கப்படுவதில்லை. எனினும் மேற்கூறிய விவரங்கள் நிர்வாகத்திடம் தற்போது கோரப்பட்டுள்ளது. பதில் பெறப்பட்டவுடன் உடனடியாக தங்களுக்கு தெரிவிக்கப்படும்.

இனம் 5 மேற்கூறிய தொழிற்சாலைகளில் பணிபுரிவோர்களுக்கு P.F., E.S.I. பிடித்தம் குறித்த விவரம் இவ்வலுவலகத்திற்கு சார்ந்தது இல்லை. எனவே, தங்களுக்கு நேரடியாக தகவல் அளிக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட துறைக்கு தங்களது மனுவின் நகல் அனுப்பப்பட்டுள்ளது.

இனம் 7 அத்தொழிற்சாலைகளில் தொழிலாளர்களுக்காக தொழில் வரி ஊராட்சிக்கு கட்டப்பட்ட விவரம் இவ்வலுவலகத்திற்கு சார்ந்தது இல்லை. எனவே, தங்களுக்கு நேரடியாக தகவல் அளிக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட துறைக்கு தங்களது மனுவின் நகல் அனுப்பப்பட்டுள்ளது.

25/9/2020

பொது தகவல் அலுவலர் / துணை இயக்குநர்,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்-I,
மதுரை

நகல் பணிந்தனுப்பப்படுகிறது:
மாநில தலைமைத் தகவல் ஆணையர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்,
சென்னை.

தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

அனுப்புநர்
திரு.ஆர்.கிஷோர்ஜி, எம்.இ.,
துணை இயக்குநர்
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்-I
மதுரை.

பெறுநர்
மாநில தலைமைத் தகவல் ஆணையர்
தமிழ்நாடு தகவல் ஆணையம்
சென்னை.

ந.க.எண்.ஈ/1374 / 2019, நாள்: 13.10.2020

ஐயா,

பொருள்: தகவல் அறியும் உரிமைச சட்டம் 2005-ன் கீழ் சில தகவல்கள் கோரியது – தொடர்பாக.

பார்வை: 1.திரு.M.தனபாலன், என்பவரின் மனு நாள்.21.10.2019.
(இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.31.10.2019)
2.மாநில தலைமை தகவல் ஆணையர், தமிழ்நாடு தகவல் ஆணையம் அவர்களின் ஆணை எண்.SA2683/மா.த.த.ஆ/2020 நாள்.09.09.2020
(இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.24.09.2020)
3.இவ்வலுவலக இதே எண்ணிட்ட பதில் கடிதம் நாள். 25.09.2020.

-----

மேற்பொருள் தொடர்பாக பார்வை 2ல் காணும் ஆணையில் அறிவுறுத்தியவாறு மனுதாரருக்கு பார்வை 3ல் காணும் கடிதம் வாயிலாக இனம் 1,2,5 மற்றும் 7 ஆகியவற்றிற்கு 25.09.2020 பதில் வழங்கப்பட்டு நகல் தங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. தற்பொழுது இனம் 3,4 மற்றும் 6 ஆகிய இனங்களுக்கு நிர்வாகத்திடமிருந்து பதில் பெறப்பட்டு மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டு, அதன் நகல் இத்துடன் இணைத்து தங்களுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது என்பதைப் பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இணைப்பு:
மனுதாரருக்கு அனுப்பப்பட்ட 13.10.2020
தேதியிட்ட பதில் கடித நகல்

13/10/2020
துணை இயக்குநர்
தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்-I
மதுரை.

நகல் பணிந்தனுப்பப்படுகிறது
இணை இயக்குநர்,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்,
மதுரை

TAMILNADU INFORMATION COMMISSION
16 OCT 2020
035384
CHENNAI-18

பதிவஞ்சல் ஒப்புதல் அட்டையுடன்

தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம்

அனுப்புநர்
திரு.ஆர்.கிஷோர்ஜி, எம்.இ.,
பொது தகவல் அலுவலர் /
துணை இயக்குநர்,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்-I,
மதுரை

பெறுநர்
திரு.M.தனபாலன்,
CPI(M) ஒன்றியக்குழு உறுப்பினர்,
த/பெ.மருதுபாண்டியன்,
2/121, வடக்குத்தெரு,
குலமங்களம், மதுரை-625 017

ந.க.எண்.ஈ/1374/2019, நாள்: 13.10.2020

ஐயா,

பொருள்: தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005-ன் கீழ் சில தகவல்கள் கோரியது – தொடர்பாக.

பார்வை:
1.திரு.M.தனபாலன், என்பவரின் மனு நாள்.21.10.2019.
(இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.31.10.2019)
2.இவ்வலுவலக இதே எண்ணிட்ட பதில் கடிதம் நாள்.15.11.2019 மற்றும் 25.09.2020
3.மாநில தலைமை தகவல் ஆணையர், தமிழ்நாடு தகவல் ஆணையம் அவர்களின் ஆணை எண்.SA2683/மா.த.த.ஆ/2020 நாள்.09.09.2020
(இவ்வலுவலகத்தில் பெறப்பட்ட நாள்.24.09.2020)
4.M.K.Modern Rice Mill நிர்வாகத்தினரின் கடிதம் நாள்:01.10.2020.
5.Eco Bricks Tech நிர்வாகத்தினரின் கடிதம் நாள்:12.10.2020.

-----

மேற்பொருள் தொடர்பாக பார்வை 2ல் காணும் கடிதம் மூலம் ஏற்கனவே தங்களுக்கு இனம் 1,2,5 மற்றும் 7 ஆகியவற்றிற்கு பதில் வழங்கப்பட்டது. தற்பொழுது இனம் 3,4 மற்றும் 6 ஆகிய இனங்களுக்கு நிர்வாகத்திடமிருந்து பார்வை 4 மற்றும் 5 வாயிலாக பதில் பெறப்பட்டு தங்களுக்கு கீழ்க்கண்டவாறு தகவல்கள் வழங்கப்படுகிறது.

பார்வை 4ல் காணும் M.K.Modern Rice Mill எனும் நிர்வாகத்தினரின் கடிதத்தில் அவர்களது தொழிற்சாலையில் ஆப்ரேட்டர் பணியில் உள்ளவர்களுக்கு மாத சம்பளமும் மற்றும் உதவியாளர்களுக்கு தின சம்பளமும் வழங்குவதாக தெரிவித்துள்ளனர். பெண் தொழிலாளர்கள் எவரும் பணியில் அமர்த்தப்படவில்லை. தொழிலாளர்களுக்கு கேண்டீன் வசதியோ சலுகை விலை உணவோ இத்தொழிற்சாலையில் வழங்கப்படுவதில்லை. மேலும், வருகைப் பதிவேடு விவரம் மூன்றாம் நபருக்கு வழங்குவதில்லை என்றும் தெரிவித்துள்ளனர். எனவே இத்தொழிற்சாலையின் வருகைப் பதிவேடு நகல் தங்களுக்கு வழங்க இயலவில்லை.

பார்வை 5ல் காணும் Eco Bricks Tech நிர்வாகத்தினரின் கடிதத்தில் அவர்களது தொழிற்சாலையில் அனைத்து தொழிலாளர்களுக்கும் வார சம்பளம் வழங்குவதாக தெரிவித்துள்ளனர். இத்தொழிற்சாலையில் பணிபுரியும் Unskilled labour என்ற நிலையிலுள்ள ஆண், பெண் தொழிலாளர்களுக்கு சம ஊதியம் வழங்கப்படுகிறது. தொழிலாளர்களுக்கு கேண்டீன் வசதியோ சலுகை விலை உணவோ இத்தொழிற்சாலையில் வழங்கப்படுவதில்லை. மேலும், வருகைப் பதிவேடு விவரம் மூன்றாம் நபருக்கு வழங்குவதில்லை என்றும் தெரிவித்துள்ளனர். எனவே இத்தொழிற்சாலையின் வருகைப் பதிவேடு நகல் தங்களுக்கு வழங்க இயலவில்லை.

Gopinath Rice Mill எனும் தொழிற்சாலை நிரந்தரமாக மூடப்பட்டுள்ளதால் அதன் தொடர்பான விவரம் ஏதுமில்லை என்ற விவரம் தகவலாக தங்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

13/10/2020

பொது தகவல் அலுவலர் / துணை இயக்குநர்,
தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம்-I,
மதுரை

நகல் பணிந்தனுப்பப்படுகிறது:
மாநில தலைமைத் தகவல் ஆணையர், தமிழ்நாடு தகவல் ஆணையம், சென்னை.